## 9. பாதுகாப்பு வலை

### 9.1 சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம்

1995ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் 2,013,685 குடும்பங்களை உள்ளடக்கி 2000ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாகக் காணப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டம் காசுக் கொடைகள், நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், ஊக்குவிக்கப்பட்ட சேமிப்புக்கள் மற்றும் சமுர்த்தி வங்கித் தொழில் வசதிகளை உயர்த்துவதன் மூலம் அடிமட்ட முதலீடு என்பனவற்றை வழங்கியது.

- ▲ சமுர்த்தி வருமான குறைநிரப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்தச் செலவு, 1999இன் ரூ.8,175 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் ரூ.12,355 மில்லியனாகக் காணப்பட்டது. செலவிலேற்பட்ட இவ்வதிகரிப்புக்கு 2000ஆம் ஆண்டு ஓகத்திலிருந்து சமுர்த்திப்படி 40 –150 சதவீதத்தில் அதிகரிக்கப்பட்டமையே முக்கிய காரணமாகும்.
- ▲ சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 150,108 இடம் பெயர்ந்த குடும்பங்கள் உலர் உணவுப் பங்கீட்டைப் பெற்றன. உலர் உணவுத் திட்டத்தின் செலவு 2000ஆம் ஆண்டில் ரூ.1,829 மில்லியனாக விளங்கியது.
- ▲ ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டத்துக்கு ரூ.138 மில்லியன் கொண்ட தொகையொன்று செலவிடப்பட்டது.
- ▲ 2000ஆம் ஆண்டின் இறுதியில் 22,468 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் பணியிலிருந்தனர்.
- ▲ சமுர்த்தி ஜனதா செயற்றிட்டத்தின்கீழ் சமூகங்களினால் அடையாளங்காணப்பட்ட 1,123 சிறிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக ரூ.140 மில்லியன் கொண்ட தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ▲ சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 85,431 கோரல்களுக்கெதிராக ரூ.171 மில்லியன் கொண்ட தொகையொன்று செலுத்தப்பட்டது.
- ▲ 2000ஆம் ஆண்டின் இறுதியில் 920 சமுர்த்தி வங்கித் தொழிற் சங்கங்கள் தொழிற்பாட்டிலிருந்தன.
- ▲ சமுர்த்தி கட்டாய சேமிப்புத் திட்டத்தின்கீழ் 2000ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 6,329 மில்லியன் சேமிக்கப்பட்டது. தன்விருப்புச் சேமிப்புக்கள் ரூ. 735 மில்லியனாக விளங்கின.

சமுர்த்தி நன்மைபெறும் குடும்பங்கள்




வரைபடம் 9.1

சமுர்த்தி நலன்புரிச் செலவு




வரைபடம் 9.2